DFCC BANK
Keep Growing

# தனிப்பட்ட கடன்கள்
# முக்கிய தகவல்கள் ஆவணம்

2019

**உள்ளடக்கம்**

1. அறிமுகம்
2. தகுதி
3. தனிப்பட்ட கடன் பிரிவுகள்
4. மீளளிப்பு
5. வட்டி வீதங்கள் மற்றும் தரகுப்பணம்
6. கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகள்
7. விண்ணப்பிக்கும் முறை
8. எம்முடன் தொடர்புகொள்ளும் முறை

**1. அறிமுகம்**

தனிப்பட்ட கடன் என்பது நுகர்வு வங்கிச் சேவையின் வரம்பெல்லைக்குள் வழங்கப்படும் ஒரு வசதியாகும். பல சிறப்பம்சங்கள் கொண்ட இவ் வசதியைப் பயன்படுத்துவோரின் தொகை துரிதமாக அதிகரித்து வருகின்றது. தனி நபர்களின் தனிப்பட்ட நிதித் தேவைகளை ஈடுசெய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கடன் திட்டம் 2 தினங்கள் என்ற சேவை வரையறையைக் கொண்டுள்ளது (ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் கடன் வழங்கப்படும்).

வங்கியின் சிற்றளவுக் கடன் புத்தகத்தின் வளர்ச்சியை முன்னேற்றுவதும் நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளின் (CASA) எண்ணிக்கையை அதிகரிப்பதுமே தனிப்பட்ட கடன்கள் வழங்கப்படுவதன் பிரதான நோக்கங்களாகும். தனிப்பட்ட கடன்களை வழங்கும்போது கடனாளிகளின் சம்பளங்கள் வங்கிக் கணக்கிற்கு அனுப்பட வேண்டும் என்பதால், CASA அதிகரிப்பிற்குத் அவை முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன.

**2. தகுதி**

குறைந்தபட்ச தகுதி நிபந்தனைகளைப் பூத்தி செய்யும் அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களும் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள தொழில் வல்லுநர்களும் தனிப்பட்ட கடனுக்கு விண்ணப்பிக்க முடியும். அவர்களின் வருமானம், தொழில்நிலை என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொருவரின் தேவைக்கும் உகந்த பல்வேறு கடன் திட்டங்கள் உள்ளன.

**2. 1. தகுதி நிபந்தனைகள்**

I. அதிகபட்ச வயதெல்லை 55 வயது (தொழில் வழங்குநரின் ஊர்ஜிதப்படுத்தலுடன் 60 வயது வரை).
II. தொழிலில் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு கடன் பிரிவு தொடர்பிலும் எமது வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை ஆண்டுகள் நிபந்தனை பூர்த்தி செய்யப்பட வேண்டும். தொழில் வல்லுநர்கள் தமது தொழில் செயற்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும்.
III. குறைந்தபட்ச மாத வருமானமாக ரூ.30,000 (அடிப்படைச் சம்பளம் + நிலையான படிகள் + மாறுபடக்கூடிய படிகள்) அல்லது அதற்கு மேல் பெற வேண்டும்.

**3. தனிப்பட்ட கடன்களின் பிரிவுகள்**

நாட்டின் முன்னோடி அபிவிருத்தி வங்கி என்ற முறையில், DFCC வங்கியானது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட தேவைகள் மற்றும் மீளளிப்பு ஆற்றலுக்கு அமைவாக பின்வரும் தனிப்பட்ட கடன் பிரிவுகளைக் கொண்டுள்ளது:

| திட்டம்/ சேவை | விபரம் |
|---|---|
| தொழில்வல்லுநர் கடன்கள் | நிலையான தொழிலிலுள்ள மற்றும் சுயதொழில முயற்சியில் ஈடுபட்டுள்ள தொழில் வல்லுநர்களுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட கடன் திட்டம். |
| GMOA கடன்கள் | அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் (GMOA) அங்கத்தவர்களுக்கென |

| | |
|---|---|
| | பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்ட கடன் திட்டம். |
| IESL கடன்கள் | இலங்கைப் பொறியியலாளர்கள் நிலையத்தின் (IESL) அங்கத்தவர்களுக்கென பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்ட கடன் திட்டம். |
| ஸ்பீட் லோன் | அரசாங்க மற்றும் தனியார் துறைகளிலுள்ள நிறைவேற்று அலுவலர்களுக்கு உகந்த துரித கடன் திட்டம். |
| வாகனப் பேர்மிட் வைத்திருப்போருக்கான தனிப்பட்ட கடன் | வாகனப் பேர்மிட் வைத்திருப்போருக்கான விசேட கடன் திட்டம். |
| Hiflex கடன் | மிகவுயர்ந்த நிலையான வருமானம் பெறுவோருக்கென, மேலதிகப் பற்று வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட கடன் திட்டம். |

**4. மீளளிப்பு**

கடனின் ஆகக்கூடிய மீளளிப்புக் காலம் அந்தந்தக் கடன் பிரிவைப் பொறுத்தும் 60 வயது என்ற வயதெல்லைக்கு உட்பட்டதாகவும் 5 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை வேறுபடலாம். மீளளிப்பை சமப்படுத்தப்பட்ட மாதாந்தத் தவணைகளில் செலுத்த வேண்டும் (அதாவது, கடனின் மாதாந்த மீளளிப்பும் வட்டியும் ஒரு நிலையான தொகையாக இருக்கும்).

**5. வட்டி வீதங்கள் மற்றும் தரகுப்பணம்**

ஏற்புடைய வட்டி வீதங்களை www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் பார்க்கலாம்.

**6. கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகள்**

ஏற்புடைய கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகளை www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் பார்க்கலாம்.

**7. விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, நிரப்பி DFCC கிளை ஒன்றில் சமர்ப்பியுங்கள் அல்லது www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் கிடைக்கும் விசாரணைப் படிவத்தை நிரப்புங்கள்.

தனிப்பட்ட கடனுக்குத் தேவையான ஆவணங்கள் எவையென்பதையும் எமது வலைத்தளத்தில் பார்க்கலாம்.

கடனுக்கு விண்ணப்பிப்பதற்காக நீங்கள் விரும்பும் கிளை ஒன்றிற்கும் செல்லலாம்.

**8. எம்முடன் தொடர்புகொள்ளும் முறை**

+94(11)2350000 என்ற எமது 24 மணிநேர தொடர்பு நிலைய தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது info@dfccbank.com என்ற மின்னஞ்சல் மூலம் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். எமது கிளை ஒன்றிற்கும் நீங்கள் விஜயம் செய்யலாம். கிளைகளின் விபரங்களை எமது வலைத்தளத்தில் பாருங்கள்.